[29th March 1963

(b) The bad smell is only a nuisance. It does not endanger health.

(அ) ஆம்.

(இ) அந்தத் துர்நாற்றத்தினுல் தொந்தரவே ஒழிய, சுகாதாரத்திற்குக் கேடு எதுவும் ஏற்படாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இதைப்பற்றி அரசாங்கத்தில் பரிசீலனை செய்யப்பட்டு சொல்லப்படுகிறதா? அல்லது உத்தேசத்தின் பேரில் சொல்லப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், துர்நாற்றத்தால் சுகாதாரத்திற்குக் கெடுதல் இல்லை என்று. துர்நாற்றம் என்றாலே சுகாதாரக் கெடுதல் என்றுதானே அர்த்தம்? ஆகவே துர்நாற்றத்தால் சுகாதாரம் கெடுகிறது என்பதால் அதைப்போக்க முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்லா துர்நாற்றமும் சுகாதாரத்திற்குக் கெடுதல் இல்லை என்று நான் சொல்லவில்லை. நியூசென்ஸ் என்றுதான் நான் சொன்னேன். **Health Engineering Research Institute, Nagpur**-ல் இருந்து என்ன செய்யவேண்டும், எப்படி ஒழுங்குப்படுத்தவேண்டும் என்று ரெக்கமென்டேஷன் வந்திருக்கிறது. பைலட் பிராஜெக்ட் ஆரம்பித்து இந்த வேலைகளுக்காக செடிமென்டேஷன் டாங்குகள் கட்ட அனுமதித்திருக்கிறது. இப்போது நான் சேலம் போயிருந்தபோதுகூட ஹெல்த் ஆபீசரிடம் சொல்லியிருக்கிறேன், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று. தாங்க முடியாத துர்நாற்றம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். பாக்டரி ஓனர்ஸ்கூட இந்த பைலட் பிராஜெக்டுக்கு 2 ஆயிரம் ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். ஆனல் அவர்கள்கூட அந்த வேலையை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். செடிமென்டேஷன் டாங்க் வற்புறுத்திக் கட்டித்தான் ஆக வேண்டியிருக்கிறது. சிலர் பைப்புகளை வைத்து, அதன் மூலம் தங்களுடைய லாண்டுகளுக்கு இரிகேட் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும்.

Regional Transport Officers (transfer of certain powers)

* 435 *Q.*—Sri C. KOTHANDARAMA BAGAVATHER: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to delegate certain powers of the Regional Transport Officers to the Superintendents in the Office of the Regional Transport Officers on following matters under Rule 135 of Madras Motor Vehicles Rules, 1940:—

(i) Renewal of licences of drivers and conductors; and

29th March 1963]

(ii) issue of temporary permits to spare buses for marriages, excursions, etc., during the absence of the Regional Tranport Officers at the headquarters?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Over-head reservoir at Woriyur

* 436 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) when the foundation stone was laid by the Chief Minister for the construction of an over-head reservoir at Woriyur, in Tiruchirappalli Municipal area for improving drinking water-supply; and

(*b*) if so, the present stage of the progress of the work?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) On 25th March 1959.

(*b*) Detailed plans and estimates for Rs. 31·58 lakhs have been prepared and technically sanctioned by the Public Works Department. Tenders for one of the service reservoirs have been settled on 28th June 1962 and this work which is in progress is expected to be completed in August 1963. There has been difficulty in the acquisition of site for another reservoir. This has been settled now and it is expected that this reservoir will also be completed by November, 1963.

(அ) 1959 மார்ச் 25-ம் தேதியன்று கனம் முதல் அமைச்சர் அடிக்கல் நாட்டினர்.

(இ) ரூபாய் 31.58 லட்சத்துக்கு விரிவான திட்டங்களும், மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு, பொதுப்பணித் துறையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு நீர்த்தேக்கத்திற்கு டெண்டர் 28—6—1962 அன்று நிச்சயிக்கப்பட்டது. இத் திட்ட வேலை 1963 ஆகஸ்டில் பூர்த்தியாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மற்ளெரு நீர்த்தேக்கத்திற்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதில் கஷ்டமிருந்தது. இக்கஷ்டமும் தீர்ந்து இந்த நீர்த்தேக்க வேலை ஆரம்பமாகியுள்ளது. இதுவும் 1963 நவம்பரில் பூர்த்தியாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

Water-supply Scheme (Rasipuram)

* 437 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any representation, dated 7th July 1962 was received from the Communist Party, Rasipuram Branch in Salem district requesting for the construction of a dam in Sitharmalai for the supply of drinking water; and

(*b*) the action taken thereon?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No.

(*b*) Does not arise